## தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2010

# தமிழ்மொழி

## ஆண்டு 5

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) கீறிட்ட இடங்களில் பொருத்தமான விடையைத் தேர்ந்து எழுதுக.**

1. ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்குப் பொருட்களை அனுப்புவது

   ______________________________

   ( ஏற்றுமதி, இறக்குமதி, சிறப்புமதி)

2. பண்டைத் தமிழர் வணிகம் செய்த நாடுகளில் ஒன்று

   ______________________________.

   (ருசியா, செருமனி , கிரேக்கம்)

3. எவரையும் பணிவுடன் வணங்குவது தமிழர் ______________________________.

   (குறைபாடு, பண்பாடு, நாகரிகம்)

4. குறள் : வையத்துள் வாழ்வாங்கு வாழுபவன்

   ____________________. வைக்கப்படுவான்

   (புகழுள், தெய்வத்துள், மக்களுள்)

5. தமிழரது அறநூல்களில் உலகம் போற்றுவது ______________________________.

   (ஆத்திசூடி, மூதுரை, திருக்குறள்)

6. தைப்பொங்கல் கொண்டாடப்படுவது இவரைப் போற்ற

   ____________________.

   (மாட்டை, கதிரவனை, உழவரை)

7. தமிழரது புத்தாண்டு நாள் ______________________________.

   (தை முதலாம் நாள், சனவரி முதலாம் நாள், சித்திரை முதலாம் நாள்)

8. சிற்பக்காடு எனப் புகழப்படுவது ______________________________.

   (சிகிரியா, மாமல்லபுரம், மாவிட்டபுரம்)

9. ஆடற்கலை பற்றித் தெளிவாக விளக்கிக் கூறும் இலக்கியம்.

________________________

(புறநானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம்)

10. எல்லா உலகநாட்டு மக்களும் கலந்துகொள்ளும் விளையாட்டுப்போட்டி

________________________.

(ஒலிம்பிக்போட்டி, துடுப்பாட்டப்போட்டி, உதைபந்தாட்டப்போட்டி)

11. உறவினர் அனைவரையும் அணைத்து வாழ்வது

________________________.

(கொண்டாடல், சுற்றந்தழால், விருந்தோம்பல் )

12. பல இறைநெறி மக்களும் சென்று வணங்கும் மன்னாரில் உள்ள தலம்

________________________.

(அம்மன்கோவில், மடுமாதாகோவில், தம்பிரான் கோவில்)

13. முன்னாளில் மன்னாரில் உலகப் புகழ்பெற்ற வணிகப்பொருள்

________________________

(மீன், மயில்தோகை, முத்து)

14. கடற்கரையில் அமைந்துள்ள பேரூரை இப்படி அழைப்பர்

________________________.

(பட்டினம், நகரம், துறைமுகம்)

15. பாலாவி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஈச்சுரம்

________________________.

(முனீச்சுரம், கோணேச்சுரம், கேதீச்சுரம்)

16. தமிழீழத்தின் தேசியப் பறவை ________________________.

(செண்பகம், மயில், காகம்)

17. குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பில் மாறுவதால் ஏற்படுவது

______________________.

(பாலை, நெய்தல், மருதம்)

18. உலகில் நிலத்தின் இயல்பிற்கு ஏற்ப வாழ்வையும் கலைகளையும் அமைத்து வாழ்ந்தவர்கள் ______________________.

(சீனர், தமிழர், சிங்களவர்)

19. நாட்டு விலங்குக்குச் சரியான எடுத்துக்காட்டு ______________________.

(கரடி, ஆடு, குரங்கு)

20. சிலப்பதிகாரம் எனும் காப்பியத்தை எழுதியவர்

______________________.

(மாடலன், இளங்கோ அடிகள், செங்குட்டுவன்)

21. இது இல்லாவிடில் பெருங்கடலும் வற்றும் ______________________.

(ஆறு, குளம், மழை)

22. இலங்கைத்தீவு அமைந்துள்ள மாவாரி ______________________.

(பசுபிக், இந்து, அத்திலாந்திக்)

23. கடல் + கரை இதைச் சேர்த்து எழுதினால் ______________________.

(கடல்கரை, கடற்கரை, கடல்க்கரை)

24. சிங்கம் முழங்கும் அதுபோல் நாய் ______________________.

(குய்யிடும், கத்தும், குரைக்கும்)

25. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்பன ______________________.

(ஐம்பொருள், ஆனைந்து, ஆன்பொருள்)

26. தமிழ்மொழியில் முதல் எழுத்துகளின் எண்ணிக்கை ______________________.

(12, 18, 30 )

27. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்களை இவ்வாறு கூறுவர் ____________________.

(மாநிலம், நானிலம், நன்னிலம்)

28. மாந்தளிர் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

____________________.

(மாந் + தளிர், மாம் + தளிர், மா + தளிர்)

29. யானைமருப்பும் மயிற்றோகையும் ____________________ செல்வங்கள் எனப்படும்.

(காடுபடு, கடல்படு, மலைபடு)

30. காந்தள் எனும் பூவின் இன்றைய பெயர் ____________________.

(கனகாம்பரம் பூ, ஆம்பல் பூ, கார்த்திகைப் பூ)

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர் பண்பாட்டில் இரண்டறக் கலந்தது நடுகல் வழிபாடு. தமிழர் கற்காலந் தொட்டே இறந்தோரைத் தாழிகளில் அடைத்துப் புதைத்தனர். பகை கண்டால் உயிரை மதிக்காது போரிடும் ஆண்மை மிக்கவர்கள், ஆனிரை கவர்தல் மீட்டல் போன்றவற்றில் வீரச்சாவு அடைந்தவர்களுக்கு நடுகல் நாட்டுவது தமிழர் மரபு. போற்றுதற்குரிய வீரனைப் புதைத்த இடத்தில் அவனைப் பற்றிய செய்தி பொறிக்கப்பட்ட கல்லை நாட்டுவர். அதுவே நடுகல் எனப்படும். அந்நடுகல்லை அவ்வீரனின் நினைவாகக் கொள்வர். இத்தகைய நடுகற்களைத் தமிழர் போற்றி வணங்கினர். தமிழரது வீரத்தைப் பற்றிக் கூறும் நூல் புறநானூறு. அந்நூலில் நடுகல் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. இறைவழிபாட்டை விட நடுகல் வழிபாடே தமிழகத்தில் மேலோங்கி இருந்தது. இன்றும் எங்கள் தமிழீழமண்ணில் துயிலும் இல்லங்களில் நடுகற்களைக் காணலாம். தாய்மண்ணிற்காக தம் உயிரை ஈந்தவர்கள் அந்நடுகற்களில் வாழ்கின்றனர். புகழுடம்பு பெற்ற அவர்கள் நடுகற்களில் சாகாவாழ்வு வாழ்கின்றனர். துயிலும் இல்லங்களில் நிறைந்துள்ள நடுகற்கள் தெய்வீகம் உடையவை. இந்நடுகல் வழிபாட்டு நாளே மாவீரர் நாள் ஆகும்.

1. யாருக்கு நடுகல் நாட்டப்படும்?

______________________________

______________________________

2. நடுகல் பற்றிய செய்திகளைக் கூறும் பழந்தமிழ் நூல் எது?

______________________________

______________________________

3. தமிழீழத்தில் நடுகல் நாட்டப்பட்டுள்ள இடங்களை எப்படிக் கூறுவர்?

______________________________

______________________________

4. தமிழர் பண்பாட்டில் இரண்டறக் கலந்தது எது?

______________________________

______________________________

5. தமிழீழ மக்களுடைய போற்றுதலுக்குரிய நடுகல் வழிபாட்டு நாள் யாது?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

**3) தரப்பட்டுள்ள தொடர்களைச் சரியாக இணைக்கவும்.**

| | |
|---|---|
| தமிழ் எங்கள் | ஆடற்குல மக்கள் |
| தமிழர் வீரச் சாவடைந்தவர்களுக்கு | மருதம் எனப்படும் |
| பழந்தமிழ்க் கலையான பரதத்தை | உயிர்ப்பின் இருப்பு |
| வயலும் வயல் சார்ந்த இடமும் | முன்னாளில் கூத்து என்பர் |
| கூத்தர், விறலியர் | நடுகல் நாட்டுவர் |

(புள்ளிகள் 05)

**4) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை எழுதுக.**

1. ஒருவன் எப்பொழுது முழுமனிதன் ஆகிறான்?

______________________________________________

______________________________________________

2. தமிழர் புத்தாண்டின் மறுபெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

3. தஞ்சைப் பெரிய கோவிலில் உலக வியப்புப் போன்று மக்களை வியக்க வைக்கும் சிறப்புப் பொருள் என்ன?

______________________________________________

______________________________________________

4. பேராசையால் பவளக்கொடிக்கு நடந்தது என்ன?

______________________________________________

______________________________________________

5. தமிழீழத்தின் தேசிய அடையாளங்களான பூ, விலங்கு, மரம் ஆகியவற்றைத் தருக.

______________________________________________

______________________________________________

6. சேரலாதனின் அரசவையில் கணிகன் கூறியது என்ன?

______________________________________________

______________________________________________

7. மாந்தை எந்தப் பெருநிலத்தின் துறைமுகமாக இருந்தது?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 15)

**5) பாடல்- வினாக்களுக்கு முழுவிடை தருக.**

கூடும் நட்பு நல்லதெனில்
கூடிச் சேர்ந்து உயர்ந்திடலாம்!
நாடும் நண்பர் சேர்க்கைதான்
நாளை உம்மை உருவாக்கும்!!

நல்ல நட்பே நன்மைதரும்!
நாடித் தேடித் செல்லுங்கள்!!
பொல்லா நட்போ தீமைதரும்!
புரிந்து ஒதுங்கி நில்லுங்கள்!!

இன்பம் தேடி அணுகுவது
    இனிய நட்பாய் இருக்காது!
துன்பம் கண்டு துடிப்பதுதான்
    தூய நட்பு நம்பிடுவாய்!!

பார்த்துத் தெரிந்த நட்பொன்றே
    பாரில் உமக்கு உயர்வுதரும்!
தேர்ந்து எடுக்கும் நட்பொன்றே
    சிறப்பாய் உயர வழிகாட்டும்!!

1. எது எமக்கு நன்மை தரும் ?

______________________________

______________________________

2. தூய நட்பு எத்தகையது?

______________________________

______________________________

3. எத்தகைய நட்பால் நாம் உயர்ந்திடலாம் எது?

______________________________

______________________________

4. எத்தகைய நட்பு தீமை தரும்?

______________________________

______________________________

5. தேர்ந்து எடுக்கும் நட்பு எதற்கு வழிகாட்டும்?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

6) **கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| வீரமரணம் | இடுகின்றனர் | குவிந்தது | அஞ்சாத | தப்பியோடுகிறது |

வன்னியின் வீரமறவர்கள் எதற்கும் ______________ நெஞ்சுரம் கொண்டவர்கள். ஆங்கிலேயரின் முல்லைத்தீவுக் கோட்டையை ஒரு வைகறையில் முற்றுகை ______________. கோட்டையிலிருந்த பீரங்கிகள் முழங்குகின்றன. ஆங்கிலேயக் கடற்படைக் கப்பல்களிலிருந்து உதவிப்படை விரைகிறது. வன்னி மறவர்கள் கடலில் வைத்தே அவர்களுக்கு ______________ அளித்தனர். பீரங்கிக் குண்டுகளுக்கு அஞ்சாது வன்னிமறவர் அடர்ந்து நெருங்கி வீரவிளையாட்டு ஆடுகின்றனர். மதில் மேல் கயிறெறிந்து தடம்போட்டு வாயில் வாளுடன் கோட்டையில் ஏறுகின்றனர். உள்ளும் புறமும் தமிழரின் வீரவிளையாட்டு. தாக்குப் பிடிக்க முடியாத ஆங்கிலப்படை கோட்டையை விட்டுவிட்டு ______________. பீரங்கிகள் வன்னியரால் கைப்பற்றப்பட்டன. கோட்டை தகர்க்கப்பட்டது. இறுமாந்து நின்ற ஆங்கிலக்கோட்டை சாம்பல் மேடாகக் ______________.

(புள்ளிகள் 10)